# மேட்டுப்பாளையம் நகராட்சி

06.07.2020ம் தேதி திங்கட்கிழமை மாலை .00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

1

பார்வை : மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயமுத்தூர் அவர்களின் செயல்முறை ந.க.எண் 505/2019/A2, நாள் 03.07.2020

பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்களின் கடிதத்தில் 2019–20 ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | பரிந்துரை செய்யப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | நகராட்சி கல்வி நிதி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 21, காட்டூரில் உள்ள நியாய விலைக்கடை அருகில் அங்கன்வாடி புதிய கட்டிடம் கட்டுதல் | 10.00 | 5.50 | 4.50 |
| 2. | வார்டு எண் 4 சங்கர் நகரில் அங்கன்வாடி புதிய கட்டிடம் கட்டுதல் | 10.00 | 5.50 | 4.50 |
| | மொத்தம் | 20.00 | 11.00 | 9.00 |

மேற்படி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.11.00 இலட்சம் போக அதிகப்படியான செலவினம் ரூ. 9.00 இலட்சம் தொகையினை இந்நகராட்சி ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து ஏற்கவும் உரிய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை போக அதிகப்படியான செலவினத்தை இந்நகராட்சி ஆரம்பக் கல்வி நிதியில் இருந்து ஏற்கலாம்.

(ந.க.எண். 1967/ 2020 / இ1)

# மேட்டுப்பாளையம் நகராட்சி

15.07.2020ம் தேதி புதன்கிழமை மாலை .00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

**1**

**மேட்டுப்பாளையம் நகராட்சியில் – தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் (TURIP 2020–21) கீழ் தார்சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளுக்குண்டான நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17349/2019/இ3, நாள் 14.07.2020 –இல் கேட்டுக் கொண்டதற்கிணங்க கீழ்க்கண்ட பணிகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**

| சிப்பம் எண் | பணியின் பெயர் | சாலையின் வகை | சாலையின் நீளம் (மீ.) | சாலை யின் அகலம் (மீ.) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 7 பழைய நகராட்சி அலுவலக சாலை, வார்டு எண் 8 மகாஜன பள்ளி சாலை, வார்டு எண் 20 பெண்கள் மேல்நிலைப்பள்ளி சாலை மற்றும் வார்டு எண் 22 எல்.எஸ்.புரம் பிரதான சாலை ஆகியவற்றில் தார்ச்சாலை அமைத்தல். | தார்சாலை | 2020.00 | 8.50, 7.00, 6.00, 5.00 | 165.00 | 123.75 | 41.25 |
| 2 | வார்டு எண் 29 நடூர் பள்ளி சாலை, வார்டு எண் 30 ஹவுசிங் யூனிட் புதிய நகராட்சி அலுவலகம் அருகில் மற்றும் சுபம் காலனி சாலை , வார்டு எண் 31 கே.கே.நகர் முதல் மற்றும் இரண்டாம் வீதி ஆகியவற்றில் தார்ச்சாலை அமைத்தல். | தார்சாலை | 2100.00 | 7.00, 6.50, 6.00 | 160.00 | 120.00 | 40.00 |
| | | | | மொத்தம் | 325.00 | 243.75 | 81.25 |

**அலுவலகக் குறிப்பு :**

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
   **ந.க.எண் 1761/2020/இ1**
2. **நகராட்சி பங்குத் தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.**

27.07.2020ம் தேதி திங்கட்கிழமை மாலை .00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர்த்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய குடிநீர்த் திட்டம் ஆற்று நீரை நேரிடையாக எடுத்து சுத்தம் செய்து சுத்த குடிநீராக மாற்றி பொதுமக்களுக்கு நேரிடையாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கூட்டு குடிநீர்த்திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நீரேற்றம் செய்யப்பட்டு பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மேல் நிலைத் தொட்டியில் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br><br>புதிய குடிநீர்த்திட்டத்தில் (New Scheme) ஆற்றிலிருந்து நேரிடையாக குடிநீரை நீரேற்றம் செய்து வடிதளங்கள் (Tilter beds) மூலம் சுத்தம் செய்யப்பட்டு நகரில் உள்ள நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நான்கு மேல்நிலைத் தொட்டிகளில் பழைய நகராட்சி அலுவலக மேல்நிலைத் தொட்டி , சங்கர் நகர் மேல்நிலைத் தொட்டி ஆகிய இரு மேல்நிலைதொட்டிகளிலும் ஒரு நாள்விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br><br>மணிநகர் மேல்நிலைத் தொட்டியில் நீரேற்றம் செய்யும் குடிநீர் மூன்று நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கே.கே.நகர். மேல்நிலைத் தொட்டியில் மோட்டார் வைத்து நீரேற்றம் செய்யப்படுவதால் நான்கு நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதிலும், ஏதாவது மின்தடை மற்றும் மோட்டார் பழுதுகள் பைப் உடைப்பு ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் காலதாமதம் ஆகிறது. மேலும், நகரில் 25 வார்டுகளுக்கு ஒருநாள்விட்டு ஒருநாளும் 4 வார்டுகளுக்கு மூன்று நாட்கள் ஒருமுறையும் மீதி உள்ள 4 வார்டுகளுக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறையும் சரிசமமில்லாத வகையில் விநியோகம் செய்யப்படுகிறது. ஆதலால் நான்கு மேல்நிலைத் தொட்டிகளிலும் சரிசமமாக குடிநீர் நீரேற்றம் செய்ய புதிதாக 30HP மோட்டார் (H.S.C Pump) வைத்து தனியாக மேல்நிலைத் தொட்டிகளுக்கு பழைய நகராட்சி அலுவலக மேல்நிலைத் தொட்டி, சங்கர் நகர் மேல்நிலைத் தொட்டிகளுக்கு புதிதாக பைப்லைன் அமைத்து , மோட்டார் வைத்து நீரேற்றம் செய்தால் நகரில் அனைத்து பகுதிகளுக்கும் ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் விநியோகம் செய்யலாம். தற்போது ஒரே சமயத்தில் நான்கு மேல்நிலைத் தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்படுவதால் குடிநீரின் அளவு குறைவதால் தொலைவில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு சரியாக நீரேற்றம் செய்ய இயலவில்லை.<br><br>ஆகையால், புதிதாக 30HP மோட்டார் பம்பு செட் வாங்கி புதியதாக பைப்லைன் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 48,00,000/– (நாற்பத்தி எட்டு லட்சத்திற்கு) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு குடிநீர் வடிகால் வாரிய விலைப்படி பணிக்காக மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கனிம வளத்துறை நிதியில் நிதி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : கனிம வளத்துறை நிதியில் ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் , கோயம்புத்தூர் அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பித்து மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3389/2020/இ1 |

31.07.2020ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை .00 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | இந்நகராட்சியில் 2019 – 20 ஆண்டு கணக்குகள் தயார் செய்யும் பணிக்கு கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>வ. எண். \| விபரம் \| தொகை<br>1 \| பிரியதர்ஷினி M.Sc தோக்கவாடி, திருச்செங்கோடு \| 70000<br>2 \| சுபரதா M.C.A க/பெ. பாலசுப்ரமணியம் தேவனாங்குறிச்சி \| 60000<br>3 \| A.V ஸ்ரீதர் B.E.,இ189, கூட்டப்பள்ளி காலனிதிருச்செங்கோடு \| 50000<br><br>மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். A.V ஸ்ரீதர் B.E அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை கோவை, அவர்களுக்கு ஆண்டு கணக்குகள் உடனடியாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நபர்களுக்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண். 854/2018/பி1 |
| 2 | இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு 2020 –21ம் ஆண்டிற்கான காப்பீட்டுச் சந்தா, சாலை வரி மற்றும் பசுமை வரிக்கான தோராய செலவினம் ரூ. 10,00,000க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 400/2017/எச்1 |
| 3 | இந்நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவு வாகனம் TN40B 1497 டிப்பர் லாரிக்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்வதற்கு கடந்த 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br><br>வ. எண். \| ஒப்பந்ததாரர் பெயர் \| ஒப்பந்தத் தொகை ரூ.<br>1 \| ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு \| ரூ. 2,49,200/–<br>2 \| முருகன் ஆட்டோஸ், ஈரோடு \| ரூ. 2,55,500/–<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1614/2020/எச்1 |

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப் பணி மேற்கொள்ள DBC எனப்படும். களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2019 – 2020ஆம் ஆண்டு ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர் –2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.350/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே, 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.08.2020 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 19,00,150/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> : அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1688/2016/எச்1 |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்குத் துறை, நாள்.30.04.1997ன்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016, நாள். 24.02.2016 மற்றும் 18.07.2016ன் படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண். எச்1/6219/2016 நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.எண். எச்1/494/2019 நாள்.28.02.2019ல் மீண்டும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 28069/ஜே3/2018 நாள். 17.06.2019ன்படி மேற்கண்ட பிரேரணைகள் 61 நபர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 90 நபர்களுக்கு அனுமதி கோரும் பிரேரணை பரிசீலனையில் உள்ளதால் சுகாதார பணிகள் பாதிக்காமல் இருக்கவும், பொது சுகாதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர்.எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 91 நபர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தத் தொகையிலேயே 01.08.2020 முதல் 31.10.2020 வரை 3 மாதங்களுக்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 494/2020/எச்1 |
| 6 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்களால் நொய்யல் ஆறு விரிவாக்கம், புனரமைத்தல் மற்றும் நவீன மையமாக்கல் பணியினை 28.05.2020 அன்று காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைக்கப்பட்ட சிறப்புமிக்க நிகழ்வினை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நாளிதழ்களில் கோவை மாவட்ட அளவில் Mani ADS என்கிற விளம்பர நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ. 391545/–னை Mani ADS விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u> :<br>1. அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந.க.எண்.2072/2020/இ1 |

7 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.30ல் உள்ள co-operative colony பகுதியில் உள்ள பிரதான சாலையில் உள்ள இரண்டு சிறு பாலங்களும் மிகவும் பழுதடைந்துள்ளது. இது பிரதான சாலை என்பதால் பேருந்துகள் மற்றும் கனரக வாகானங்கள் செல்லும் சாலை என்பதால் இப்பகுதியில் இரண்டு சிறுபாலங்கள் அமைக்க ரூ. 6.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** தற்பொழுது தார் சாலை பணிகள் நடைபெறுவதால் இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதனால், இப்பணியில் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கையினை தொடர மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3395/2020/இ1

8 மேட்டுப்பாளையம் நகராட்சியின் பொதுநிதி 2020–2021ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 17.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | **பொதுநிதி 2020 – 21**<br>மேட்டுப்பாளையம் நகராட்சி பொதுச் சுகாதாரப் பிரிவில் உள்ள 32 மின்சாரம் மூலம் இயங்கும் வாகனங்களுக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ. 9.80 இலட்சத்தில் | திருவாளர். ஹார்ப் சிஸ்டம்ஸ் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர். ஐவா அஸோசியேட்ஸ் | 1.43% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஹார்ப் சிஸ்டம்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3099/2020/இ1

9 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சீராஜ் நகர் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் உள்ள Bio Methnation Plant ல் உள்ள மோட்டார்கள் மற்றும் இதர உபகரணங்களை பழுது நீக்கி மின் உற்பத்தியாளை தடையில்லாமல் மேற்கொள்ள ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3522/2020/இ1

10 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட கே.கே.நகர் பகுதியில் 14 தார்சாலை பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பகுதியில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்திற்கான Manhole களை உயர்த்தவும் மற்றும் சாலையோரம் கொட்டப்பட்டுள்ள பழைய தார் சாலை கழிவுகளை அகற்றவுடன் மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3523/2020/இ1

11 மேட்டுப்பாளையம் நகராட்சில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Combined Scheme மோட்டார் மற்றும் Combined Scheme ல் இருந்து குடிநீர் விநியோகிக்கப்படும் ஒரு பகுதியில் உள்ள 21 Value களை நவீன முறையில் Automatic on & off மேற்கொள் மதிப்பீடு ரூ.9.85 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3649/2020/இ1

| | |
|---|---|
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 8ல் உள்ள S,M நகர் நகராட்சிப் பள்ளிக்கு சிறுசிறு மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1847/2020/இ1 |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 10ல் உள்ள S,M நகர் பகுதியில் உள்ள கழிவு நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கு தண்ணீர் தேங்கி நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி இங்கு வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1846/2020/இ1 |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 8ல் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான S.M நகர் நகராட்சிப் பள்ளியில் உள்ள அங்கன்வாடி மற்றும் பள்ளிக்கு சிறுசிறு மராமத்து பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணிக்கு ரூ. 3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் கல்வி நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது இப்பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.1846/2020/இ1 |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019–20ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 22.07.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 21, காட்டூரில் உள்ள நியாய விலைக்கடைஅ ருகில் அங்கன்வாடி புதிய கட்டிடம் கட்டுதல் | ரூ. 10.00 இலட்சம் | திரு.கே.வேலுசாமி | 4.93% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்ப்ராஸ்டரக்சர்ஸ் | 7.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண். 4 சங்கர் நகரில் அங்கன்வாடி புதிய கட்டிடம் கட்டுதல் | ரூ. 10.00 இலட்சம் | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க் சுஷ்மா இன்ஸ்ப்ராஸ்டரக்சர்ஸ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.கே.வேலுசாமி | 7.90% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1967/2020/இ1

| | |
|---|---|
| 16 | கோவை மாவட்டத்தில் உள்ள நொய்யல் ஆற்றினை விரிவாக்கம் புனரமைத்தல் , நவீன மயமாக்கல் பணியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.05.2020 ஆம் தேதியில் காணொலி காட்சி முலம் துவக்கி வைக்கப்பட்டது. மேற்காணும் செய்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் மாவட்டத்தில் உள்ள மாலைதமிழகம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி மாலை தமிழகம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ. 14700/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2072/2020/இ1 |
| 17 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஜெனேரட்டரினை வருடாந்திர பராமரிப்பு செய்யவும் மற்றும் ஆயில் ஏர்பில்டா ஆகியவற்றினை மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.75.00/— ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u> :** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.2527/2019/இ1 |

18 மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு நீரேற்றம் செய்யும் போது நகரில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்பு சரிசெய்யவும், பொதுக் கழிப்பிடம் மற்றும் பொதுக் குழாய்களுக்கு தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும், மேலும் பாதாள சாக்கடை பணிகள் நடைபெறுவதால் அதில் ஏற்படும் பம்பிங் மெயின் உடைப்புகள், பகிர்மானக் குழாய் உடைப்புகள் சரிசெய்யவும், அதற்கு தேவையான உபகரணங்கள் வாங்கி பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/—க்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.604/2020/இ1

19 இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள ஜெனரேட்டர்களை வருடாந்திர பராமரிப்பு (AMC) மற்றும் ஆயில் , ஏர்ரில்டர் ஆகியவற்றினை மாற்றம் செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு வரப்பெற்ற விலைபுள்ளி களின் விவரத்தினை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | சி.நாகராஜ்<br>5/567ஏ, ஐயப்பன் கோவில் பின்புறம்<br>ராஜீவ்காந்தி நகர்,மேட்டுப்பாளையம். | ரூ. 24550/— |
| 2 | மணி நஞ்சன் டீசல் சர்விஸ் (பி) லிமிடெட்,<br>101, சாந்தி நகர், ஏரோடேம் Post,<br>கோவை | ரூ. 21772/— |

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.2527/2019/இ1

20 மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் கணினிப் பிரிவில் உதவி திட்ட அமைப்பாளருக்கு புதிதாக பிரிண்டர் வாங்கவும் பொறியியற் பிரிவில் தற்போது உள்ள பிரிண்டர்கள் பழுதானதால் இயக்க முடியாமல் உள்ளது. தற்போது சாலைப் பணிகள் மற்றும் இதர பணிகள் நடைபெறுவதால் அனைத்தும் கணினிப்பிரிவில் பதிந்து பிரிண்ட் எடுக்கும் சூழ்நிலை உள்ளதால் புதிதாக இரண்டு பிரிண்டர்கள் வாங்கவும், ஆணையர் அறைக்கு புதிதாக ஆல்—இன்—ஒன் (All in one pic) கணினி வாங்கி இயக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2,50,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3396/2020/இ1

21 தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 25.06.2020ஆம் தேதியன்று கோவையில் ரூ.239 கோடி ரூபாயில் வளர்ச்சி திட்டப்பணிகளை துவக்கி வைக்கப்பட்டது. இத்துவக்க விழாவின் பொழுது கடந்த 5 ஆண்டுகளில் நடைபெற்ற வளர்ச்சி பணிகள்விவரத்தினை மக்கள்குரல் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. அவ்விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரம் கட்டணம் ரூ. 77962/— ஐ வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மக்கள்குரல் நாளிதழ்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.2072/2020/இ1